CENTRE FOR POLICY ALTERNATIVES
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

**முன்மொழியப்பட்டுள்ள அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தம் மீதான சவாலில் இடையீடு செய்யும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**

*12 செப்ரெம்பர் 2018, கொழும்பு, இலங்கை:*

5 செப்ரெம்பர் 2018 அன்று பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்த சட்டமூலத்தை எதிர்த்து – தனிநபர் பிரேரணையை சவாலுக்குட்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மம்பிலவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவுக்கு எதிராக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் அதன் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து இன்று இடையீட்டு மனு தாக்கல் செய்துள்ளார். முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலமானது நிறைவேற்று ஜனாதிபதியின் அலுவலகம் தொடர்பில் முக்கியமான மாற்றங்களைச் செய்வதற்கு முனைகின்றது. அச்சட்டமூலத்திற்கு அமைவாக ஜனாதிபதி அரசாங்கத்தின் தலைவர் என்ற பதவியினை வகிக்க இயலாது என்பதுடன் பாராளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மையினூடாக அவர் ஐந்து வருட காலப்பகுதிக்கு தெரிவு செய்யப்படுவார்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இவ்வழக்கில் தலையீடு செய்கின்றமையானது, அதன் நீண்டகால கோரிக்கையான நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் என்பதனை மீள எதிரொலிப்பதாய் அமைந்துள்ளது. 1994ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் உள்ளடங்கலாக ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலிலும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் என்ற வாக்குறுதியானது இலங்கைப் பிரஜைகளின் ஆதரவினைப் பெற்றுவந்துள்ளது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது இதற்காகத் தொடர்ச்சியாக வாதாடி வருவதுடன், அது நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களை எதேச்சாதிகாரமான மற்றும் ஜனநாயகமற்ற முறையில் அதிகரித்த அரசியலமைப்புக்கான 18வது திருத்தத்தை சவாலுக்குட்படுத்திய ஒரே ஒரு சிவில் சமூக அமைப்பாக காணப்படுகின்றது. மேலும், 18ஆவது திருத்தத்தினால் வழங்கப்பட்ட சில அதிகாரங்களைக் குறைத்து மற்றும் சில பிரதான திருத்தங்களைச் சாத்தியப்படுத்திய அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தத்திற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது ஆதரவினை வழங்கியிருந்தது. இத்தருணத்தில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது முன்மொழியப்பட்டுள்ள இச்சட்டமூலத்தினை, தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் 2015ஆம் ஆண்டு ஆட்சிபீடம் ஏறுவதற்கு முக்கிய காரணமாக அமைந்த ஒரு முக்கியமான வாக்குறுதியினை நிறைவேற்றுவதற்கான ஒரு சிறந்த திருத்தமாக கருதுகின்றது.